

ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட கழக செயலாளர் முகாம் அலுவலகம், மாவட்ட கழக அலுவலகம், முனிசிபல் காலனி, பன்னீர்செல்வம் பார்க் , மொடக்குறிச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சு. முத்துசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப. செல்வராசு உள்ளிட்ட மாநில , மாவட்ட, மாநகர, பகுதி , வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# நெல்லை மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!



நெல்லை, ஜூன் 9-

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி, நெல்லை மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (09.06. 2026-செவ்வாய்க்கிழமை) மாலை 04.00 மணி அளவில் நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் எனது தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது பங்கேற்று கருத்துகளை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக வளர்ச்சிப்பணிகள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் –

# மஸ்கட் மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## பி.கே.சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது!

மஸ்கட், ஜூன் 9-

ஓமன் திமுக அயலக அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழா மிக விமர்சையாக மஸ்கட் மாநகரில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியினை ஓமன் தி.மு.க. செயலாளர் சிவக்குமார் துவக்கி வைக்க, அவைத்தலைவர் பாலமுருகன் வரவேற்புரை ஆற்றிட, பொருளாளர் சிவசெந்தில் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கி நன்றி உரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் ஓமன் தி.மு.க. அயலக அணி துணை அமைப்பாளர்கள் முகமது பாரூக் அயூப் கான், மற்றும் நிர்வாக குழு சார்ந்த உறுப்பினர்களான முனைவர் சுந்தர வடிவழகன், ராமச்சந்திரன், ஓம் பிரகாஷ், கவிஞர் சுதர்சன், மாணிக்கவேல், தயாநிதி, மார்சலின், ராஜன், பிராங்கிளின், சுவாஜிதின் அபுததிர், கோபாலகிருஷ்ணன், மருத்துவர் மலர்வண்ணன், சுந்தர், மருத்துவர் பஷீர் அகமத், பேச்சி முத்து, பாட்ஷா, காதர், முகமது அன்சாஷ் முகமது இஸ்மாயில், நசீர்கான், ஹாஜா மைதீன், முகமது சுபயான், அகம் மைதீன், வைஸ்லீ பேராசிரியர் மாரிமுத்து, ராஜகோபால், கண்ணதாசன், பிரதீப், குமார், சலாருதீன், அப்துல் சமத், கமல் பிரவீன் ராஜ், சதீஷ், தாரிக், ரபிக், காமில் மற்றும் கழக மகளிர் அணியைச் சார்ந்த நிர்வாகிகள் ரேவதி அறிவுச்செல்வி, உமா மகேஸ்வரி, சத்யா, அஸ்மா பேகம், பகராபாத்திமா, யோகன், அவந்திகா,


கவிஸ்ரீ மற்றும் ஓமன் திமுக GENZ குரூப்ஸ் மற்றும் பல்வேறு துறையை சார்ந்த வல்லுனர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அனைவரும் நம் சமூக நீதியின் சூரியன் கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட அரை நூற்றாண்டு சாதனைகளை வரலாற்றுச் செய்திகளை பேசியது சிறப்பு வாய்ந்ததாக அமைந்திருந்தது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் ஒவ்வொரு குடும்பமும் பெற்ற நன்மைகளும், கலைஞர் அவர்கள் ரத்து செய்த நுழைவுத் தேர்வுகளைப் பற்றியும் அடிப்படை கல்வி முதல் கல்லூரி கல்வி வரை அவர் நம் தமிழ் சமூகத்திற்கு செய்த எண்ணற்ற நன்மைகளும் குறிப்பாக பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர் கொண்டு வந்த சீர்திருத்தங்களும் என அனைத்து தகவல் களஞ்சியங்களும் அனைவருக்கும் அறியும் வண்ணம் எடுத்துரைக்கப்பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்துக்களோடு தொடங்கப்பட்ட இந்த நிகழ்ச்சி இறுதியில் அனைவரின் மனதிலும் " கலைஞர் ஓர் சகாப்தம்" என்ற எண்ணங்களோடு மீண்டும் கழக ஆட்சியினை கொண்டு வர வேண்டும் என்று உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியாக முடிந்தது.



மயிலாடுதுறை மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்ட அரசு மருத்துவமனையில் ஜீன் 3ஆம் தேதி பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் அணிவித்தார். உடன் மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை.சௌமியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் மூவலூர் எம்.மூர்த்தி, மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா இளையபெருமாள், பஞ்சு.குமார்,பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ். ஹர்ஷத் நத்தம் ஏ.வின்சென்ட் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மத்திய மாவட்ட கழக மாணவரணி சார்பில் பெருந்துறையில் விழியிழந்தோர் சங்கம் மாற்றுத்திறனாளிகள் மையத்தில் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி. வெங்கடாச்சலம் வழிகாட்டுதலின்படி மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சரளை ராசு (எ) எஸ். கோபால் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் கழக தேர்தல் பணிக்குழு துணை தலைவர் கே.பி.சாமி, நகர்மன்ற தலைவர் ஓ.சி.வி.ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் பால்சின்னசாமி, பேரூர் கழக செயலாளர் அகரம் மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் பூபதி, இளைஞரணி பாலசுப்பிரமணியம், சுற்றுச்சூழல் அணி கார்த்தி, விவசாய அணி ஆனந்த், முருகராஜ், தொண்டரணி ஆனந்த், சங்கர், லாரன்ஸ், பவானி நகர மாணவரணி அமைப்பாளர் விமல்குமார், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் கோபாலகிருஷ்ணன், கௌரிஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



காங்கிரஸ் கட்சியின் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் செல்வராஜ் அக்கட்சியில் இருந்து விலகி கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தார். இதில் மாநில கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை ந.கௌதமன், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) சுதாகர், சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன், கோவை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பசுமை நிழல் சூ.ஆ.விஜயகுமார், சூலூர் நகர கழக செயலாளர் சு.கவுதமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பீடம்பள்ளி சுரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய அரசியலில் பலமான அதிர்வலைகள் உருவாகும்!



**சௌமியன் வைத்தியநாதன்**
*கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்*

**வ**ரும் எட்டாம் தேதி டெல்லியில் நடைபெறுவதாக இருக்கும் இந்தியா கூட்டணி கட்சிகளின் முக்கியமான கூட்டத்தில் தி.மு.க. பங்கேற்காது என்று அறிவித்த வினாடியில் இருந்து, தேசிய அரசியலில் ஒருவிதமான பதற்றநிலை உருவாகிவிட்டிருக்கிறது என்பதை,

சிலர் ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள், சிலர் வெளிக்காட்டாமல் கடந்து போக முயற்சிப்பார்கள். ஆனால் வரும் வாரங்களில் இதற்கான மிகப் பலமான அதிர்வலைகள் தேசிய அரசியலில் பல பரிணாமங்களை உருவாக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ப.சிதம்பரம் துவங்கி, அவரது மகன், கிரிஷ் சோடங்கர், கார்கே, நாராயணசாமி, சிவக்குமார், திருமாவளவன், லோக்கல் காங்கிரஸார் சிலர் உள்ளிட்ட பலரும் தி.மு.க.வின் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும்,

அதில் சிலர், தி.மு.க.வின் இந்த முடிவானது, பா.ஜ.க.வுக்கு சாதகமாக அமைந்து விடும் என்று எச்சரிக்கும் தொனியிலும், காங்கிரஸின் லோக்கல் புரோக்கர் மாணிக்கமும் தி.மு.க., பா.ஜ.க.வுக்கு ஆதரவாச் செயல்படுகிறது என்கிற ரீதியில் வன்மத்தை கக்கியும் பேசிவருகின்றனர்.

ஆனால் காங்கிரஸ் மட்டுமல்லாது, விஜய் பாஷையில் சொல்வதானால், வி.சி.க. உள்ளிட்ட அல்லு சில்லு கட்சிகள் எல்லாம் தவெகவுக்கு ஆதரவு தெரிவிக்கும் போது நாங்கள் ஆதரவளிக்கா விட்டால், மறைமுகமாக ஆளுநர் ஆட்சி என்கிற வகையிலோ, அ.தி.மு.க.வின் ஒரு பிரிவு ஆதர வளித்து பா.ஜ.க. ஆதரவு ஆட்சியாக அமைந்து விடும் என்கிற காரணத்தாலோதான் நாங்கள் பின்னங்கால் பிடறியில் அடிபடும் அளவிற்கு ஓடிச்சென்று த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்து,

கட்டில் மெத்தையில் கூட படுக்காம, வெறும் சோஃபாவிலேயே படுத்துறங்கி, அமைச்சர் பொறுப்பை ஒரு முள் படுக்கையாக பாவித்து பா.ஜ.க. ஆட்சி இங்கே வந்து விடாமல் தடுத்து விட்ட ஒரு ஜென் மனநிலையில் இருக்கின்றோம் என்று அளந்து விட்டுக் கொண்டி ருக்கின்றனர்!

ஆனால் சற்று நிதானமாக யோசித்தால், பா.ஜ.க. ஆட்சி இங்கே தமிழ்நாட்டில் ஏற்பட வாய்ப்பே இல்லை. ஆளுநர் ஆட்சி அமைந்தாலும், மீண்டும் ஆறு மாதங்களுக்குள் மறு தேர்தல் வந்து விடும். அப்படியே அ.தி.மு.க.வின ஆதரவைப் பெற்று த.வெ.க. ஆட்சி அமைத்தாலும்,

அ.தி.மு.க.வினர் தண்ணீர் போன்ற ஒரு திரவம். அது எந்த குடுவையில் அல்லது பாத்திரத்தில் ஊற்றப்படுகிறாதோ அந்த வடிவத்தையே தனதாக்கிக் கொள்வார்கள். அதாவது பா.ஜ.க. கூட்டணி என்றால் பா.ஜ.க. மாதிரியும், காங்கிரஸ் கூட்டணி என்றால் காங்கிரஸ் மாதிரியும், த.வெ.க. கூட்டணி என்றால் த.வெ.க. மாதிரியும் தங்களை தகவமைத்துக் கொள்வார்கள் அல்லது மாற்றிக் கொள்வார்கள்.

ஆகவே மறைமுகமாக பா.ஜ.க. வந்துவிடும், மல்லாக்கப்படுத்து பா.ஜ.க. வந்து விடும் என்று இந்த அல்ற சில்றைங்க எல்லாம் உதார்விடுவது ஆகச் சிறந்த நகைமுரண்!

போகட்டும், இவர்கள் உண்மையாகவே பா.ஜ.க. எதிர்ப்பில் அவ்வளவு உறுதியானவர்கள் என்றால், ஒரு அறம் சார்ந்த நேர்மையான இயக்கங்களாக இருந்தால், கம்யூனிஸ்டுகள் போல வெளியில் இருந்து பிரச்சினைகளின் அடிப்படையில் ஆதரவு தெரிவித்து இருக்க வேண்டும். அல்லது. ஒரு குறைந்தபட்ச செயல் திட்டத்தை வடிவமைத்து அதில் த.வெ.க.வை கையெழுத்திட வைத்து உள்ளே நுழைந்திருக்க வேண்டும்.

ஆனால் இவர்களில் நோக்கமும் அவசரமும் எப்படியிருந்தது என்றால், அ.தி.மு.க.வின் ஒரு பிரிவு உள்ளே நுழைந்து விட்டால், தங்களுக்கு கிடைக்கும் பணமும் பதவியும் கிடைக்காமல் போய்விடுமே என்கிற அவசரத்தில், அள்ளித் தெளித்த கோலமாய் போய் ஒட்டிக் கொண்டார்கள் என்பதுதான் ஒட்டுமொத்த தமிழக மக்களுக்குமே தெரிந்த உண்மை!

அவர்கள் சொல்வதில் ஒரு உண்மை இருக்கிறது. அவர்கள் நோக்கத்தில் பழுதில்லை, அவர்கள் கொள்கைப் பிடிப்போடுதான் இருக்கின்றார்கள் என்பதை ஒரு வாதத்திற்காக ஏற்றுக்கொண்டால்....

ஒரு மாநிலத்தில் மறைமுக பா.ஜ.க. ஆட்சி அமையாமல் தடுப்பது முக்கியமா அல்லது ஒன்றியத்தில் மீண்டும் பா.ஜ.க.வின் நேரடி ஆட்சி அமையாமல் தடுப்பது முக்கியமா என்றால்,

இவர்கள் எதைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்?

ஒன்றியத்தில், பா.ஜ.க.வுக்கு கடிவாளம் போடும், மட்டுப் படுத்தும், கட்டுப்படுத்தும், அல்லது ஆட்சிக்கே வரவிடாமல் தடுக்கும் ஒரு ஆட்சி அமைவதற்குத்தானே இவர்கள் முன்னுரிமை தந்திருக்க வேண்டும்? அதாவது 'இந்தியா' கூட்டணியின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு, தி.மு.க.வுடன் இவர்கள் அனுசரணையாக இருந்திருக்க வேண்டுமா? இல்லையா?

சரி, இனி தி.மு.க. இடத்தை த.வெ.க.வை வைத்து இட்டு நிரப்பிக்கொள்வோம் என்று இவர்கள் சொல்வார்களேயேனால், காங்கிரஸ், வி.சி.க. மற்றும் ஐ.யு.எம். எல் கட்சிகளின் ஒன்பது எம்.எல்.ஏ.க்களையும் ராஜினாமா செய்யச் சொல்லி விட்டு, இவர்கள் வாதத்திற்கு வலு சேர்க்கும் வகையில் தேர்தலை சந்தித்து, மீண்டும் ஒன்பது எம்.எல்.ஏ.க்களை த.வெ.க. கூட்டணியோடு நின்று வென்று காட்டி விட்டு,

இனிமேல் தி.மு.க. இடத்தில் நாங்கள் த.வெ.க.வை வைத்து சமன் செய்து கொள்வோம் என்று சொன்னால் மட்டுமே இவர்களின் அந்த வாதம் எடுபடும். Otherwise இவர்கள் மறைமுகமாக வெளியிடும் இந்த காரணம் வெறும் சப்பைக்கட்டாகவே இன்னபிற தேசியக் கட்சிகளாலும், இந்தியா தழுவிய மாநிலக் கட்சிகளாலும் கணிக்கப்படும்.

சரி அடுத்த கட்டத்திற்கு வருவோம்.

தி.மு.க. இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்றால் என்னவாகும்?

ஏற்கனவே அந்த 'இந்தியா' கூட்டணியில் இருக்கின்ற முக்கிய கட்சிகளான அகிலேஷ் யாதவ்வின் சமாஜ்வாதி கட்சி, தேஜஸ்வி யாதவ்வின் ராஷ்டிரிய ஜனதாதளக் கட்சி, கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி மற்றும் தமிழ்நாட்டிற்கு வெளியே உள்ள இன்னபிற மாநிலக் கட்சிகள் எல்லாம் தி.மு.க. மற்றும் அதன் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீதான நம்பிக்கையிலும், அன்பிலும், கொள்கைப் பிடிப்பிலுமே பற்றுக் கொண்டு இந்தக் கூட்டணியில் நீடித்து வருகின்றன.

ஆகவே தி.மு.க. தனது ஆட்டத்தை வரும் வாரங்களில் டெல்லியில் இருந்து துவங்கப் போகின்றது. காங்கிரஸ் முஃப்த் பாரத் கோஷத்தை முன்னெடுத்தது என்னவோ பா.ஜ.க.தான்.... ஆனால் அதை முடித்து வைக்கப் போவது தி.மு.க.!

காத்திரு பகையே..!



செம்மொழி காவலர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ரதி மனோகர் ஏற்பாட்டில் வெல்லும் தமிழ்ப்பெண்கள் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி மகளிர்க்கு புத்தாடைகளை வழங்கினார். இதில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.